*செய்தி வெளியீடு எண்: 45* *நாள்: 28.11.2019*

**தேனி மாவட்டம்**
**சுருளி சாரல் விழா 2019**
**வருகின்ற 30.11.2019 மற்றும் 01.12.2019**
**ஆகிய இரண்டு தினங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது.**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-**

*****

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட சுருளி அருவியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறையின் சார்பில் 30.11.2019 சனிக்கிழமை மற்றும் 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு தினங்கள் சுருளி சாரல் விழா – 2019 சிறப்பாக நடைபெறவுள்ளது.

சுருளி சாரல் விழாவினை வருகின்ற 30.11.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து அரசின் நலத்திட உதவிகளை வழங்கிடவும், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்கள் பல்துறை பணிவிளக்க கண்காட்சியினை திறந்து வைத்திடவும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்கள் தலைமையேற்கவும், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ப.ரவீந்திரநாத்குமார் அவர்கள் முன்னிலை வகிக்கவும், சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துரை வழங்கிடவும் மற்றும் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

மேலும், இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள சுருளி சாரல் விழாவில் பல்வேறு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் உள்ளீட்ட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. மேலும், தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு, பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்படவுள்ளது.

எனவே, சுருளி சாரல் விழாவில் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**